**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 136/2006** **Date:15.06.2026.**

**(DW1)-** ஜெயசீலன்

<u>**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. பத்திர எண் 1271/2003 ஆவணம் எழுதும் போது எனது அப்பாவின் வயது 74 என்றால் சரிதான். மேற்படி பத்திரம் எழுதம் போது எனது தந்தை பலகீனமாக இருந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது அப்பா நல்ல புத்திசுாவதீணத்தில் இருந்தால் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதி 1 முதல் 3 பிரதிவாதிகள் பற்றி எனது தந்தையிடம் தவறான விசியங்களை சொல்லி மேற்படி ஆவணத்தை எழுதி வாங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்ன தவறு என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது தந்தை ஆவணத்தை எழுதும்போதும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஊரில் இல்லை என்பதை நிருபிக்க நான் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. நான் ஊரில் தான் இருந்தேன் என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பத்திர எண் 1271/2003 ஆவணத்தை எனது சகோதரரர் எழுதி பெற்றபின் எனது சகோதரர் எனது தந்தையை சரியாக கவனிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது சகோதரர் கவனிக்கவில்லை என்பதையும் பிரதிவாதிகளாகிய நாங்கள் தான் கவனித்தோம் என்பதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்,ஆனால் சாட்சிகள் உள்ளது.

3. பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் பல பக்கங்கள் இல்லை என்றால் அதை நான் முழுவதுமாக படிக்கவில்லை அதை பற்றி தெரியாது. மேற்படி ஆவணத்தில் 2003 ஆம் வருடம் ஜனவரி மாத பக்கங்கள் அனைத்தும் இல்லையென்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதே போல் வெவ்வேறு மாதங்கள்ளில் நிறைய பக்கங்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மூத்த சகோதரர் எனது அப்பாவை போல் எழுதுபவர் என்றாலும் அவருடைய கையெழுத்து மேற்படி ஆவணத்தில் நிறைய பக்கங்களில் உள்ளது என்றாலும் சரியல்ல.

4. மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து இல்லை என்று நிரூபிக்க முடியாது என்றால் அப்பாவிற்கு டைரி எழுதும் பழக்கம் உண்டு,

அவர் தான் டைரி எழுதினர் என்று தெரியும், ஆனால் நான் அதை படித்தது கிடையாது. ஆவண எண் 1271/2003 எழுதி வாங்கிய பின்பு பட்டிகை சொத்தின் நிலவரி ரசீது, பட்டா முதலியன எனது அப்பாவின் பெயரில் தான் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் எனது அப்பாவின் பெயரில் உள்ளதை காட்ட சொத்து வரி ரசீதையோ, பட்டாவையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.3 ஆவணத்தில் தான் எனது அப்பா வருவாய் ஆவணங்கள் அவரது பெயரில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளாரே தவிர உண்மையில் எந்த வருவாய் ஆவணங்களும் இல்லை என்றாலும் அவரது பெயரில் உள்ள பட்டாவோ, நில வரி ரசீதோ வேறு வருவாய் துறை ஆவணங்களோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எழுதி முடித்தவுடன் 05.11.2003 தேதியிட்ட அருள்செல்வன் பெயருக்கு வா.சா.ஆ.2 வருவாய் ஆவணம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, ஆனால் அப்பாவின் பெயரில் அனைத்து மாதங்களுக்கும் வருவாய் ஆவணங்கள் உள்ளது.

6. வா.சா.ஆ.2 ஆவணம் எனது தந்தை வாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த உடன் பெற்ற முதல் ரசீது என்றால் அது போலியான ரசீது ஆகும், அவ்வாறு உண்மையான ரசீதாக இருக்மென்றால் அது தொடர்ச்சியாக எனது அப்பா பெயரில் ரசீது போட்டு இருக்கமாட்டார்கள். பட்டிகை சொத்தில் 3 வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 வீடுகளும் வாதியின் பெயரில் மாற்றப்பட்டதாக குளச்சல் நகராட்சி ரசீது வழங்கியுள்ளது என்றாலும் மேற்படி ஆவணம் வா.சா.ஆ.11 என்றாலும் அப்படி ஒரு ஆவணம் இருக்கும் விபரம் எனக்கு தெரியாது, மேற்படி சொத்தில் முறையாக அனுமதி பெற்று வங்கியில் கடன் பெற்று வீடு அமைத்துள்ளேன், எனவே மேற்படி வா.சா.ஆ.11 ஆவணம் உண்மையாக இருக்க வாய்பில்லை.

7. வாதியின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டதால் அதில் உள்ள மின்சாரம் மற்றும் குடிநீர் இணைப்புகள் அவர் பெயரில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வாதியின் கைவசம் அனுபவத்தில் இருப்பதை காட்டக்கூடிய ஆவணங்களாக வா.சா.ஆ.2 மற்றும் 11 ஆவணங்கள் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் பக்கம் 2 பத்தி 3 ல் மேற்படி சொத்துகளை எழுதி வாங்கிய பின்பு வாதி சொத்தை கைவசம் வைத்து அனுபவித்து வந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை குறிப்பிட்டேன் அது தவறுதாலக பட்டிகை சொத்து என்று

குறிப்பிட்டுள்ளது.

8. பட்டிகை சொத்திலும் மற்றும் கட்டிடத்திலும் வாதி எந்த அபிவிருத்தி செய்யவில்லை என்பதை காட்டக்கூடிய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது தந்தை ரத்து செய்யமாட்டேன் என்று உறுதி மொழியுடன் தான் ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தையே எனது அப்பாவிற்கு படித்து காட்டவில்லை என்று எனது அப்பா அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட அ.வ.எண்.137/2004 வழக்கின் எதிருரையில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி எதிருரை பிரதிவாதிகளாகிய எங்களால் தாயார் செய்யப்பட்ட தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

9. எனது அப்பாவிற்கு மேற்படி ஆவணத்தை படித்து காட்டவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறோம் என்றால் சரியல்ல. அப்படி உறுதி மொழி எனது அப்பா கொடுத்திருந்தாலும் வா.சா.ஆ.3 ஆவணம்படி வா.சா.ஆ 1 ஆவணத்தை ரத்து செய்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 ஆவணம் பிரதிவாதிகளாகிய எங்களது நிர்பந்ததில், ஏற்பாட்டில் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பா நான்கு நபர்களுக்கும் சமமாக பங்கு பிரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதி உள்ளார்.

**(ஒப்பம்)**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**